## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை

O.S.No.112/2014

| | | |
|---|---|---|
| வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி | : | பி.வாசா.1 |
| பெயர் | : | ஜேம்ஸ் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சவரிமுத்து |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2026ம் ஆண்டு ஜுலை மாதம் 6ம் நாள் திங்கட்கிழமை 1872ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி பெஞ்சு கிளார்க் திரு.ரா.நாகநாதன் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கின் 4-ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியை எழுத்துமூலமாக நிரூபணவாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**<u>முதல் விசாரணை:</u>**

1. நில உடைமைக் குறிப்பேடு – அசல் –**பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 06.03.2014-ம் தேதியிட்ட கிரையப் பத்திரம் – அசல் – **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. தாவா சொத்திற்கான வரி ரசீதுகள் (எண்ணிக்கை 3) – அசல் –

**பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. நில உடைமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டத்தில் வழங்கப்பட்ட பட்டா – அசல் – **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. எனது சொந்த ஊர் புளிக்குளம் ஆகும். தாவா சொத்துக்கள் எங்கு அமைந்துள்ளது என்றால் ஆலங்குடி கிராமத்தில் அமைந்துள்ளது. தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்திற்கும் எனது கிராமத்திற்கும் இடையே எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால் சுமார் அரை கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். 1ம் பிரதிவாதியின் முன்னோரான சுப்புராயன் அம்பலத்தை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். சுப்புராயனின் இறப்பு சான்றிதலையோ வாரிசு சான்றிதலையோ நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். முத்தையா என்கிற முத்துசாமி என்ற பெயரில் ஆவணங்கள் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் 10(1)–ஐ பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் உள்ள 10(1)–ல் முத்தையா என்கிற முத்துசாமி என்று உள்ளதா என்றால் முத்துசாமி என்று தான் உள்ளது, வேறு எந்த ஆவணத்தில் உள்ளது என்றால் பட்டாக்களில் ஒன்றில் உள்ளது.

2. பி.வா.சா.ஆ.1 ஆவணத்திலும் முத்தையா என்ற முத்துச்சாமி

என்று இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணமான வரி ரசீதுகளிலும் முத்தையா என்ற முத்துச்சாமி என்று இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்திலும் முத்தையா என்ற முத்துச்சாமி என்று இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களில் வேலு என்கிற வேலுச்சாமி என்று உள்ளதா என்றால் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை யார் கூறியது என்றால் நான் தான் கூறினேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் முத்தையா என்ற முத்துசாமிக்கு வேலு என்ற வேலுச்சாமி என்ற மகன் இருந்தார் என்று குறிப்பிடுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எனக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ.2 ஆவணமான கிரைய பத்திரத்திலும் முத்தையா என்ற முத்துசாமி மகன் வேலு என்ற வேலுச்சாமி என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதியும், புஷ்ப வள்ளியும் முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமியின் மகள்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், அதற்கான ஆவணங்களை நான் பார்த்து உள்ளேனா என்றால் வாரிசு

சான்றிதழை பார்த்துள்ளேன். மேற்படி வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வாரிசு சான்றிதழை நான் எப்பொழுது பார்த்தேன் என்றால் மற்றொரு சொத்தை கிரையம் பெறும் போது பார்த்தேன். என்ன சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் 1–ம் பிரதிவாதி புஷ்பவள்ளி மற்றும் அவரது பங்காளிகள் ராஜேந்திரன் என்பவருக்கு ஒரு சொத்தை கிரயம் கொடுத்தனர், மேற்படி ராஜேந்திரனிடம் இருந்து நான் வாங்கும் பொழுது வாரிசு சான்றிதழை பார்த்தேன்.

4. மேற்படி வாரிசு சான்றிதழில் 1–ம் பிரதிவாதியின் தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரர்களைத்தான் பங்காளி என்று குறிப்பிட்டு இருந்தது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்தை எந்த வருடம் கிரையம் பெற்றேன் என்றால் 2020 ஆவது வருடம் எனது மனைவியின் பெயரில் கிரையம் பெற்றேன். மேற்படி சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம், நான்குமால் ஆகியவை தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி சொத்தின் காரணப்பெயர் தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் கும்மங்குடி கண்மாய் என்று சொல்வார்கள். 1–ம் பிரதிவாதியின் தந்தையான முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி என்பவருக்கு எத்தனை சொத்துக்கள்

பாத்தியப்பட்டு பட்டாக்கள் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களுக்கு செண்டிமெண்ட் காலத்தில் கொடுக்கப்பட்ட பட்டாவை நான் பார்த்ததும் இல்லை, அதை தாக்கல் செய்யவும் இல்லை என்று சொன்னால் சரிதான். அதை தாக்கல் செய்திருப்பதாக நான் சொல்லி இருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

5. 1-ம் பிரதிவாதியின் தந்தையான வேலு என்கிற வேலுச்சாமி அம்பலம் என்பவர் பெயரில் உள்ள பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சாஆ.4 ஆவணமான பட்டாவில் முத்துசாமி அம்பலம் மகன் வேலுஅம்பலம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சாஆ.1 ஆவணமான பட்டா பாஸ் புத்தகத்திலும் அவ்வாறு தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சாஆ.3 ஆவணத்தில் 1,2 ரசீதுகளில் மு.வேலுச்சாமி அம்பலம் என்று தான் உள்ளது என்றால் சரிதான். 3-ஆவது ரசீதில் முத்தையா அம்பலம் மகன் வேலுச்சாமி அம்பலம் என்று உள்ளது என்றால் சரிதான். பி.வா.சாஆ.2 ஆவணமான கிரைய

பத்திரத்தில் பட்டதாரரின் இறப்பு சான்றிதழையோ, வாரிசு சான்றிதழையோ கண்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான், அதற்கு பின்பாகத்தான் மேற்படி சான்றிதழ்களை நான் பார்த்தேன்.

6. மேற்படி கிரைய ஆவணத்தில் பட்டா எண்.1781–ல் தாவாசொத்துக்களுக்கான பட்டா முத்துசாமிஅம்பலம் மகன் வேலுஅம்பலம் பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் மேற்படி கிரைய ஆவணத்தில் "எங்களில் 1வது நபரின் தகப்பனார் மு.வேலு அம்பலத்திற்கு பாத்தியப்பட்டதும்" என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துகளுக்கு நான்குமால் தெரியுமா என்றால் ஒரு சொத்திற்கு ஞாபகம் உள்ளது மற்றொன்றுக்கு மறந்து விட்டது. மேற்படி ஒவ்வொரு சொத்திற்கும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும். எனது நிரூபண வாக்குமூலத்தின் 2–ஆம் பக்கத்தில் 3வது பத்தியில் 4 முதல் 6 வரிகளில் மேற்படி வேலு என்கிற வேலுச்சாமி அம்பலம் சுமார் ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், எத்தனை ஆண்டுகளுக்கு முன்பாக இறந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவரை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான்.

7. வாதிக்கு எந்தெந்த கிராமத்தில் எவ்வளவு சொத்துக்கள்

பாத்தியம் என்றும், அவரது 10(1), அடங்கல் சம்பந்தமான விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்திற்கும் முத்துச்சாமி அம்பலம் மகன் வேலு என்ற பெயரில் தான் வருவாய் துறையில் பதிவுகள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1–ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்திற்கும் வருவாய் துறையில் முத்தையாஅம்பலம் மகன் வேலுச்சாமி என்று பதிவுகள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது மனைவி பெயரில் கிரையம் வாங்கிய சொத்திற்கு எவ்வாறு பதிவுகள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை.

8. எனக்கு தாவா சொத்துக்களை கிரையம் கொடுத்த 1,2 பிரதிவாதிகளை வழக்கு நடத்தவோ அல்லது சாட்சியம் அளிக்கவோ அழைத்தேனா என்றால் நான் அழைத்தேன். ஆனால் அவர்கள் உடல்நிலை சரியில்லை என்பதால் வர மறுத்துவிட்டார்கள். அவர்கள் நல்ல உடல் நிலையில்தான் உள்ளார்கள் என்றும், அவர்கள் சாட்சியம் அளித்தால் பெயர் ஒற்றுமை காரணமாக சொத்துக்கள் எழுதப்பட்டது குறித்து தெரிந்துவிடும் என்றும் அதனால் சொத்துக்கள் எனக்கு கிடைக்காமல் போய்விடும் என்பதால் அவர்களை சாட்சியம் அளிக்க

விடாமல் தடுத்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்துக்களை மார்க்கெட் விலையை கொடுத்து தான் கிரையம் வாங்கினேன் என்றால் அதைவிட சற்று அதிகமாக கொடுத்து தான் கிரையம் வாங்கினேன். வழக்கு தாக்கல் செய்த பின்பு 1,2 பிரதிவாதிகளுக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான்.

9. நான் தாவா சொத்துக்களை உரிய விலைக்கு கிரையம் வாங்கவில்லை என்றும் 1,2 பிரதிவாதிகளுடன் வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு கிரையம் பெற்றதாக பொய்யான ஆவணங்களை உற்பத்தி செய்து எதிர்வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற பின்பு தாவா சொத்துக்கள் என் அனுபவத்திற்கு வரவில்லை என்றும் வாதிகள் தான் அதை அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல, நான் தான் விவசாயம் செய்து வருகிறேன். அதற்கான பயிர் காப்பீடும் நான் தான் செய்து வருகிறேன். நான் தாவா சொத்துக்களை அனுபவம் செய்வதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். அவ்வாறு நான் கிரையம் பெற்ற 2014 ஆம் ஆண்டிலிருந்து நான் அனுபவம் செய்வதற்கான எந்த வித

ஆவணங்களும் என்னிடம் இல்லை என்றும், அவ்வாறு இருந்திருந்தால் அவற்றை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றும், நான் வழக்கத்திற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

10. வாதிகளை பற்றியோ தாவா சொத்தை வாதிகள் அனுபவம் செய்து வந்ததாக சொல்வதைப் பற்றியோ எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.07.06 16:36:31 +0530